முதல்நிலை பேரூராட்சி, மேலகரம்.

ந.க.எண் 306 / 2010 நாள் 08-06-2010

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்றவரால் மேலகரம் பேரூராட்சியில் , 2010-2011ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ்க் குறிப்பிட்டுள்ள பணிகள் செய்ய 23-06-2010ம் தேதி புதன்கிழமை மாலை 3.00 மணி வரை தகுதி உள்ள ஒப்பந்தகாரர்களிடம் இருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது. 22-06-2010ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணி வரை உரிய கட்டணம் செலுத்தி ஒப்பந்த படிவம் பெற்றுக் கொள்ளலாம். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 23-06-2010 அன்று மாலை 3.30 மணி அளவில் திறக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

| வ எண். | வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பீடு (லட்சம்) | ஒப்பந்தப் புள்ளி படிவம் கிரையம் | டேவணித் தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | குற்றாலம் மெயின்ரோடு நபிஷா மன்ஸில் முதல் இராமர் கோவில் தெரு முடிய தார்சாலை அமைத்தல் | 10.00 | 1560 | 10,000 |
| 2 | மேலகரம் காசிமேஜர்புரம் நெடுஞ்சாலையில் இலஞ்சி குமாரகோயில் பிரிந்து செல்லும் சாலை முதல் 2 வது பாலம் வரை தார்சாலை அமைத்தல் | 5.00 | 780 | 5,000 |
| 3 | நன்னகரத்தில் சமுதாய நலக்கூடம் அமைத்தல் | 10.00 | 1560 | 10,000 |
| 4 | 13 வது வார்டு ஸ்டேட் பேங்க் காலனி 6 வது தெருவில் பார்க் அமைத்தல் | 5.00 | 780 | 5,000 |
| 5 | குடியிருப்பு வடக்கு தெரு மற்றும் 6 வது பண்டாரம் கடை முதல் அக்ரஹாரம் வரை சிமெண்ட் கான்கீரிட் அமைத்தல் | 5.00 | 780 | 5,000 |
| 6 | மேலகரம் பேரூராட்சி 3 வது வார்டு மெயின்ரோடு பஸ் ஸ்டாப் அருகில், 3 வது வடக்கு தெரு, 6வது வார்டு தெப்பகுளம் தெரு, 6வது வார்டு அக்ரஹாரம் தெரு, நன்னகரம் வெள்ளபிள்ளையார் கோவில் தெரு மற்றும் 9 வது வார்டு குடியிருப்பு ஆகிய பகுதிகளில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் வசதிகள் ஏற்படுத்துதல் | 4.80 | 780 | 4,800 |
| 7 | நன்னகரம் இசக்கியம்மன் கோவில் உண்டியல் அருகில் உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல் | 3.00 | 780 | 3,000 |
| 8 | 15 வது வார்டு என்ஜிஓ காலனி 6 வது விரிவாக்கத்தில் பூங்கா அமைத்தல் | 5.00 | 780 | 5,000 |
| 9 | நன்னகரம் சுடுகாட்டில் நன்மை கூடிடம் , எரி கூடம் சுற்றுச் சுவர் மற்றும் மேம்பாடு செய்தல் | 5.00 | 780 | 5,000 |
| 10 | 13வது வார்டு என்ஜிஓ காலனி முதல் தெரு, 14 வது வார்டு குற்றாலம் மெயின் ரோடு முதல் என்ஜிஓ காலனி 6 வது தெரு வரை மற்றும் குற்றாலம் மெயின் ரோடு டிபன்ஸ் எதிர்புறம் துரைச்சாமி ( வட்டாட்சியர் ஓய்வு) தெரு வரை வடிகால் மேம்பாடு மற்றும் தார்சாலை அமைத்தல் | 5.00 | 780 | 5,000 |
| | மொத்தம் | 57.80 | | |

நிபந்தனைகள்

1) ஒப்பந்தகாரர்கள் 31–03–2008 முடிய உள்ள காலத்திற்கு வருமான வரி மற்றும் விற்பனை வரி பாக்கியின்மை சான்று சமர்ப்பிக்க வேண்டும்.

2) பணிகளுக்கு உரிய ஒப்பந்த படிவங்களை 08–06–2010 முதல் 22–06–2010 பிற்பகல் 5.00 மணி வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகையினை மேலகரம் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் மேலகரம் பேரூராட்சி என்ற முகவரிக்கு , வங்கி வரைவோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

3) ஒப்பந்தகாரருக்கு பணிமுடிவு அறிக்கை பட்டியலின்படி உரிய தொகை வழங்கப்படும்போது பணி உறுதி டேவணி தொகையாக பட்டியல் தொகையில் 5 சதவீதம் பிடித்தம் செய்யப்படும்.

4) ஒப்பந்தப் பணிகளுக்கு தேவைப்படும் தார், கற்கள், சரள், சிமெண்ட் மற்றும் கம்பி உள்ளிட்ட அனைத்து பொருட்களையும் தங்களது சொந்த பொறுப்பில் தரமானதாக வாங்கி பயன்படுத்த வேண்டும்

5) ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்வதில் மேலகரம் பேரூராட்சி மன்றத்தின் முடிவே இறுதியானது.

6) வரிசை எண் 7ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியை மேற்கொள்ள விரும்பவர்கள், உயர்கோபுர மின் விளக்கு சப்ளை செய்வதற்கு மேற்கண்ட பொருள் தயாரிக்கும் நிறுவனமாக இருக்க வேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் டீலராக இருக்க வேண்டும். ஒப்பந்தபுள்ளி படிவத்துடன் அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும். சப்ளை செய்யப்படும் பொருள் ISI மற்றும் ISO 9001 தரச்சான்று பெற்றதாக இருக்க வேண்டும்.

7) ஒப்பந்தகாரர்களிடம் வசூல் மற்றும் பிடித்தம் செய்யப்படும் வைப்புத் தொகைகள் தணிக்கை அறிக்கை பெறப்பட்ட பின்னரே திரும்பி வழங்க பரிசீலிக்கப்படும். ( செலான் மூலம் செலுத்தப்படும் வைப்புத் தொகையை திரும்ப பெற முற்படும் போது விண்ணப்பத்துடன் செலான் இணைக்கப்பட வேண்டும் )

8) வேலையினை குறிப்பிட்ட நாட்களுக்குள் செய்து முடிக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் அரசு விதிகளின்படி அபாரதத் தொகை வசூலிக்கப்படும்

9) இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

8/6/2010

செயல் அலுவலர்,
முதல்நிலை பேரூராட்சி, மேலகரம்.

8/6/10

பெறுநர் :-

1. பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் அனைவரும்

நகல் :

1. உதவி இயக்குநர் அவர்கள், பேரூராட்சிகள் , திருநெல்வேலி மண்டலம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி செயற் பொறியாளர் அவர்கள், திருநெல்வேலி
3. உதவி பொறியாளர், குற்றாலம் பேரூராட்சி தகவலுக்கு
4. செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம் குற்றாலம் , புதூர் (செ), வடகரை , அச்சன்புதூர் , இலஞ்சி, ஆய்க்குடி, சாம்பவர் வடகரை, பண்பொழி , சுரண்டை ( அலுவலக விளம்பர பலகையில் விளம்பரம் செய்யும் பொருட்டு )
5. அலுவக விளம்பர பலகைக்கு
6. கோப்பு
7. தலைவர், துணைத்தலைவர் (ம) அனைத்து வார்டு உறுப்பினர்